**செய்தி வெளியீடு எண்: 577** **நாள்:07.08.2020**

**நிதி (வழிவகைகள்–II )த் துறை,**
**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூபாய் 2000.00 கோடி** மதிப்பிற்கு பங்குகள் வடிவிலான **4.54% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2023, ரூபாய் 1000.00 கோடி மற்றும் 6.49% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2050, ரூபாய் 1000.00 கோடி** ஏலத்தின் மூலம் மறுவெளியீடு செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் **ஆகஸ்ட் 11, 2020** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **ஆகஸ்ட் 11, 2020** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**